2010 மே 13]

இணைப்பு VI

(1037 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 15—சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை

வனத் துறை

அறிவிப்புகள், 2010–2011

அ. வன வளர்ப்பு

1. தமிழ்நாடு வன வளர்ப்புத் திட்டம்

(1) தமிழ்நாடு வன வளர்ப்புத் திட்டம் நிலை-II-ன்கீழ் 2006-2007 முதல் 2008-2009 வரை தோற்றுவிக்கப்பட்ட 1,40,250 ஹெக்டேர் தோட்டங்களின் பராமரிப்புப் பணிகளும், 665 திட்டக் கிராமங்களில் சமுதாய வளர்ச்சி மற்றும் வருவாய் பெருக்கப் பணிகளும், ரூ.52.40 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

(2) மாநில பகுதி-I திட்டத்தின்கீழ் 2009-2010 ஆம் ஆண்டில் முன்னோடிப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட 150 நீர்ப்பிரி முகடுகளில் அமைந்துள்ள, 31,050 ஹெக்டேர் வனப் பகுதிகளில், செடி நடவுப் பணிகள் மற்றும் கிராம வளர்ச்சிப் பணிகள் ரூ.17.46 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

(3) தமிழ்நாடு வன வளர்ப்புத் திட்டம் நிலை-I-ன்கீழ் 1997-98 ஆம் ஆண்டில் மேம்படுத்தப்பட்ட, வனப் பகுதிகளில் நீராதாரங்களைப் பெருக்கும் நோக்குடன், நீர்வளப் பாதுகாப்புப் பணிகள் ரூ.5.00 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

2. தனியார் நிலங்களில் மரம் வளர்ப்புத் திட்டம்

வனத்திற்கு வெளியே, பசுமைப் போர்வையை அதிகரிக்க 2010-2011 ஆம் ஆண்டில் ரூ.15 கோடி மதிப்பீட்டளவில், 1.20 கோடி சவுக்கு மற்றும் தடி மரக்கன்றுகளை தொகுப்புத் தோட்டமாக, தனியார் நிலங்களில், வனத் துறைமூலம் நடவு மேற்கொள்ளப்படும்.

3. தேக்கு மர வளர்ப்புத் திட்டம்

2010-2011 ஆம் ஆண்டில் எதிர்கால தடிமரத் தேவையினை பூர்த்தி செய்திட புதிதாக *6900* ஹெக்டேர் பரப்பில் படுகை நிலங்களில் தேக்கு மரத் தோட்டங்கள் எழுப்பும் பணியும் சென்ற ஆண்டுகளில் உருவாக்கப்பட்டத் தேக்குத் தோட்டங்கள் பராமரிப்பு பணியும், ரூ.*10.37* கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

4. ஈடு செய்யும் காடு வளர்ப்பு நிதி

2010-2011 ஆம் ஆண்டில் ஈடு செய்யும் காடு வளர்ப்பு நிதி மேலாண்மை திட்ட அதிகார குழு நிதியிலிருந்து (CAMPA) பெறப்பட்ட தொகையான ரூ.*1.75* கோடியில், *240* ஹெக்டேர் பரப்பில், ஈடு செய்யும் காடு வளர்ப்பு பணி மற்றும் இதர வன மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

ஆ. உயிர்ப்பன்மை

5. புலிகள் திட்டம்

இந்திய வன உயிரின நிறுவனம், சமீபத்தில் நடத்திய *4* ஆண்டுகளுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்படும் புலிகளின் கணக் கெடுப்பின்படி தமிழகத்தில் புலிகளின் எண்ணிக்கை *25* விழுக்காடு அதாவது *62*-லிருந்து *76* ஆக உயர்ந்துள்ளது எனத் தெரிவித்துள்ளது. *2010-2011* ஆம் ஆண்டில், ரூ.*7.65* கோடி அளவில் மூன்று புலிகள் காப்பகங்களை மேம்படுத்தவும், பாதுகாக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

6. யானைகள் திட்டம்

யானைகள் திட்டமானது நீலகிரி யானைகள் காப்பிடம், கோயம்புத்தூர் யானைகள் காப்பிடம், பெரியாறு யானைகள் காப்பிடம் மற்றும் ஆனைமலை யானைகள் காப்பிடம் என நான்கு யானைகள் காப்பிடங்களாகச் செயல்படுத்தப்பட்டு, யானைகள் எண்ணிக்கையிலும், அதன் உறைவிடங்களை மேம்படுத்துவதிலும் தமிழகம், இந்தியாவின் ஒரு முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. *2010-2011* ஆம் ஆண்டில் யானைகள் காப்பிடங்களை ரூ.*2.74* கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தவும், பாதுகாக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 மே 13]

7. சூரிய மின் வேலி

2010-2011 ஆம் நிதியாண்டில் சுமார் ரூ.3.06 கோடி மதிப்பீட்டில் 153 கி.மீ தூரத்திற்கு, சூரிய மின் வேலி, வனத்தையொட்டி பாதிப்படையக் கூடியப் பகுதிகளில், அமைத்திட உத்தேசிக்கப் பட்டுள்ளது.

8. மனித–வன உயிரின மோதல்

மனித வன உயிரின மோதல்கள் என்பவை நாளுக்கு நாள் நடைபெறும் தீவிர இடையூறாக ஆகிவிட்டன. 2009-2010 ஆம் ஆண்டில் ரூ.1.14 கோடி இழப்பீட்டுத் தொகை நிவாரணமாக வழங்கப்பட்டது. எனவே 2010-2011 ஆம் ஆண்டில் ரூ.1.50 கோடி அளவில், இழப்பீட்டுத் தொகை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மனித உயிரிழப்பிற்காக ஏற்கெனவே வழங்கப்பட்டு வரும் இழப்பீட்டுத் தொகை ரூ.1 இலட்சத்தை, வரும் ஆண்டுகளில் ரூ.1.50 இலட்சமாக உயர்த்தி வழங்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

9. சிறப்பு புலிகள் பாதுகாப்புப் படை உருவாக்குதல்

மத்திய அரசின் 100 சதவீத நிதி உதவியுடன் தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத்தினால் பரிந்துரை செய்யப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகள்படி, தமிழ்நாட்டில் முதுமலை புலிகள் சரணாலயத்தில் உள்ள புலிகளைப் பாதுகாக்க, சிறப்பு புலிகள் பாதுகாப்பு படை (STPF) உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

10. யானைகள் புனர்வாழ்வு மையம், திருச்சிராப்பள்ளி எம்.ஆர். பாளையத்தில் அமைத்தல்

அனாதை ஆக்கப்பட்ட யானைகளையும், கோவில் மற்றும் தனியாரிடம் பராமரிப்பின்றி கைவிடப்படும் யானைகளையும், சட்டப்படி அங்கீகரிக்கப்படாததால் அரசால் பறிமுதல் செய்யப்பட்ட யானைகளையும் பராமரிக்கும் பொருட்டு தமிழ்நாட்டில் திருச்சி மாவட்டதில் எம்.ஆர்.பாளையம் என்ற இடத்தில் காப்புக்காட்டில் 19.70 ஹெக்டேர் பரப்பளவில், யானைகள் புனர்வாழ்வு மையம் ரூ.1.25 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இ. வனப் பாதுகாப்பு

11. 13–வது நிதிக் குழு நிதி உதவி

தமிழகத்திற்கு, 2010-2011 முதல் 2014-2015 வரையான காலத்திற்கு, வன மேம்பாடு மற்றும் வனப் பாதுகாப்பிற்கு, நிதியுதவியாக ரூ.142.48 கோடி வழங்க பதிமூன்றாவது நிதிக் குழுமம் பரிந்துரை செய்துள்ளது. 2010-2011 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.17.81 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

12. பகுதி 2 திட்டங்கள்

2010-2011 ஆம் ஆண்டு ரூ.4.66 கோடி மதிப்பீட்டில், பகுதி இரண்டு திட்டப் பணிகள் செயலாக்கப்படும்.

ஈ. உள்கட்டமைப்பு மேம்பாடு

13. வனச் சாலை வசதி மேம்பாடு

பழங்குடியினர் மற்றும் வனங்களைச் சார்ந்து வாழும் இதர உள்ளூர் மக்களுக்கு சிறந்த சாலை வசதி தொடர்பினை ஏற்படுத்த, வனச் சாலைகள் ரூ.6.70 கோடி செலவில் 2010-2011 ஆம் ஆண்டில் பராமரித்து மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

14. கட்டடங்கள் கட்டுதல் மற்றும் பராமரித்தல்

பல்வேறு திட்டங்களின்கீழ் வனத் துறையிலுள்ள கட்டடங்கள் பராமரிப்பு மற்றும் புதிய கட்டடங்களை கட்டுதல் ஆகியவை ரூ.3.57 கோடி செலவில், மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

15. வேட்டைத் தடுப்பு காவலர்கள் பணி வரன்முறை

தற்போது தமிழ்நாடு வனத் துறையில் பல்வேறு திட்டங்களின்கீழ் 737 தற்காலிக வேட்டைத் தடுப்பு காவலர்கள் பணிபுரிகின்றனர். இதில் 137 வேட்டைத் தடுப்பு காவலர்கள் 10 வருடங்கள் பணி முடிந்து தற்காலிகமாக பணிபுரிந்து வருகின்றனர். அவர்களின் பணியை அரசாணை எண் 95, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, நாள் 7-8-2009-ல் தோட்டக் காவலர்/சமூக வன ஊழியர்களுக்கு "தோட்டக் காவலர்" என்ற மிகைப் பணியிடத்தில் பணியமர்த்தி பணி வரன்முறை செய்ததுபோல் வேட்டைத் தடுப்புக் காவலர்களையும் பணிவரன்முறை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2010 மே 13]

உ. அரசு இரப்பர் கழகம்

16. 365 முன்னாள் ஒப்பந்தத் தொழிலாளர்கள் பற்றிய குறிப்புரை

இரப்பர் உற்பத்தியை அதிகரிக்க, இக்கழகத்தில் 365 தொழிலாளர்கள் பால் வடிப்பு வேலை மற்றும் இதர வேலைகளுக்கு தினச் சம்பள ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டவர்கள் நீண்ட காலமாகவே ஒப்பந்தத் தொழிலாளர்களாக வேலை செய்து வருகின்றனர். இவர்களை நிரந்தரத் தொழிலாளர்களாக அங்கீகரித்து நிரந்தரத் தொழிலாளர்களுக்கு இணையான தினச் சம்பளம் மற்றும் அனைத்து சலுகைகளும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS